**புதுச்சேரி அரசு**
**கலை, பண்பாட்டுத்துறை**

# நேரு குழந்தை இலக்கியப் பரிசு
# வேண்டுகோட் படிவம்

புகைப்படம்

விண்ணப்பம் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 31.03.2023

1. (அ) நூலாசிரியரின் பெயர் :

   (ஆ) முழுமையான முகவரி :

2. புனைப்பெயர் (ஏதேனுமிருப்பின்) :

3. பெற்றோர் பெயர் :

4. பிறந்த நாளும் அகவையும் :
   (பிறப்புச் சான்றிதழ் நகல், குடியிருப்புச் சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்)

5. பிறந்த ஊர் :

6. கல்வித் தகுதி :

7. பிற தகுதிகள் :

8. எழுதியுள்ள நூல்கள் :

9. பெற்றுள்ள சிறப்புகள் / பட்டங்கள் :

10. குறிப்பிட விரும்பும் தொடர்புடைய பிற செய்திகள் :

11. வாழ்கைக் குறிப்பு இணைக்கப்பட்டுள்ளதா? :

12. நூலின் பெயர் :

13. (அ) பதிப்பித்த நாள்
    (01.01.2015 முதல் 31.12.2022 வரை) :

    (ஆ) பக்கங்கள் :

    (இ) அனுப்பப்பட்டுள்ள படிகளின் எண்ணிக்கை
    (5 படிகள்) :

14. பதிப்பத்தின் பெயரும் முகவரியும் :

15. கைப்பேசி எண். :

## உறுதிமொழி

நான், இப்பரிசுத் திட்டத்திற்குரிய விதிமுறைகளை முழுவதும் அறிந்துள்ளேன். அவ்விதிமுறைகளுக்கு உட்பட்டு நான் அளித்துள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்று உறுதி கூறுகிறேன்.

இடம்:

நாள்: **நூலாசிரியரின் ஒப்பம்**

---

**குறிப்பு: பூர்த்தி செய்யப்பட்ட இவ்விண்ணப்பம், இயக்குநர், கலை, பண்பாட்டுத்துறை, எண்.1, ரோமன் ரோலண்ட் வீதி, புதுச்சேரி 605 001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.**

# நேரு குழந்தை இலக்கியப் பரிசு
## விதிமுறைகள்

1. பரிசுப்போட்டியில் பங்கு பெறுவோர் விண்ணப்பப் படிவத்தினை முழுமையாக நிறைவு செய்து அனுப்புதல் வேண்டும். முழுமையாக நிறைவு செய்யப்படாத விண்ணப்பங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா

2. ஒவ்வொரு வெளியிட்டிற்கும் தனித்தனியாக விண்ணப்பப் படிவமும், நூலின் ஐந்து படிகளும் அனுப்புதல் வேண்டும்.

3. போட்டிக்கு அனுப்பப்படும் நூல்கள் குறிப்பிட்ட ஆண்டின் முதல் நாளில் இருந்து திசம்பர் 31 –ஆம் நாளுக்குள் அச்சிட்டு முதல் பதிப்பாக வெளியிடப் பெற்றிருக்க வேண்டும்.

4. நூலாசிரியரின் கையொப்பத்துடன் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

5. இப்போட்டியில் வழங்கப்படும் நூல்களை அரசால் நியமனம் செய்யப்படும் ஐவர் அடங்கிய வல்லூநர் குழு ஆராய்ந்து பரிசுக்குரிய நூல்களை தேர்ந்தெடுக்கும். இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்படும் நூலாசிரியருக்கு ரூ.10,000/- பரிசுத்தெகையும் சான்றிதழும் அளிக்கப்படும்.

6. இத்திட்டத்தின் கீழ் ஒரு முறை பரிசு பெற்றவர் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு விண்ணப்பிகக தகுதியற்றவர் ஆகிறார்.

7. போட்டிக்கு அளிக்கப்பட்ட நூல்கள், வேறு நூலின் சுருக்கமாகவோ, தழுவலாகவோ, மொழிபெயர்ப்பாகவோ, மீளக் கூறுலாகவோ இருத்தல் கூடாது.

8. பல்கலைக்கழகப் பட்டத்துக்கோ, தேர்வுக்கோ விடுக்கப்பட்ட கட்டுரையும் ஆய்வேடும் இப்பரிசு பெறத் தகுதியற்றவையாகும்.

9. பாடத்திட்டத்திற்காக எழுதப்பெற்ற நூல்கள் பரிசுப்போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

10. குழந்தை இலக்கிய நூல்கள் தமிழில் 120 பக்கங்களுக்கு மிகாமல் வெளியிடப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

11. போட்டிக்காக வரப்பெற்ற ஐந்து நூல்களை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி அனுப்ப இயலாது.

12. அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், பிற சொற்பொழிவுகள், நாளிதழ்களில் தொடராக வெளியிடப்பெற்றவை போன்றவை நூலாக ஆக்கப்பட்டிருப்பின் அவை போட்டிக்கு ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

13. ஒரு நூல், நூலாசிரியரியர்கள் பலரின் கூட்டு முயற்சியால் ஆக்கப்பட்டதாயின் பரிசுத்தொகை கூட்டாக அமைந்த நூலாசிரியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

14. குழந்தைகளுக்காக எழுதப்படும் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், பயணநூல், கட்டுரைத் தொகுப்பு போன்ற பிரிவுகள் குழந்தை இலக்கியத்தில் அடங்கும்.

15. விண்ணப்பதாரர் புதுவையில் பிறந்தவராகவோ, ஐந்தாண்டுகள் புதுவை ஒன்றிய ஆட்சிப்பரப்பில் விண்ணப்பிக்கும் நாளுக்கு முன் தொடர் குடியிருப்பு உடையவராகவோ இருத்தல் வேண்டும்.

16. இத்திட்டம் தொடர்பான விதிகளைத் தேவைக்கேற்ப அவ்வப்போது திருத்தவோ, மாற்றவோ, நீக்கவோ அரசுக்கு முழு அதிகாரம் உண்டு.

17. பரிசுக்குரிய நூல் உரியவாறு தேர்ந்தெடுக்கப்பெற்று அரசின் ஒப்புதலுடன் அரசு விழாவில் பரிசலிக்கப்படும்.

18. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் எழக்கூடிய பிரச்சனைகள் குறித்து அரசால் மேற்கொள்ளக்கூடிய முடிவே இறுதியானதாகும். அம்முடிவினை நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தோ பிற வகையிலோ எதிர்த்தல் கூடாது.